மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் சட்டம்.

*3452. திரு. எஸ். ஏ. தங்கராஜன் :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) 1966 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் சட்டம் தமிழகத்தில் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு அமல்படுத்தப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பதிவு செய்யப்பட்ட சுருட்டு நிறுவனங்கள் 70 உள்ளன. அவற்றில் 486 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். மேற்படி சட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, இந்நிறுவனங்கள் தொழிலாளர் துறையின் ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. முரண்பாடுகள் காணப்படும் நிறுவனங்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

10–15 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சுருட்டு ஆலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் 1966 ஆம் ஆண்டு வந்ததற்குப் பிறகு, இத்தொழிலாளர்கள் அனைவரையும் ஒப்பந்தக் கூலி தொழிலாளர்களாக ஆலை அரசர்கள் மாற்றி விட்டார்களே. எனவே இந்த ஒப்பந்தக் கூலி தொழிலாளர்களுக்கு இந்தக் கூலி கிடைப்பதிலே, சட்டச்சலுகைகள் கிடைக்க கான்ட்ராக்ட் அபாலிஷ்மெண்ட் சட்டம் அரசு கொண்டு வர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு சுருட்டு நிறுவனங்களில் வேலை செய்கின்றவர்கள் 486 பேர்கள் என்றாலும், இன்றைக்கு பீடி மற்றும் சுருட்டுத் தொழிற்சாலைகள் மொத்தம் 1,416 தான் பதிவு செய்யப்பட்டு அதில்

1990 சனவரி 20]

தொழிலாளர்களாக 11,839 பேர்கள் இன்றைக்கு நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். அதே நேரத்தில் பகுதி நேரத் தொழிலாளர்கள், அவர்களிடமிருந்து இலை பெற்று வீட்டிற்குசென்று சுருட்டிக் கொண்டுவந்துதிரும்பக் கொடுக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு தகுதியான அளவிலே சம்பளம் தரப்பட வேண்டும் என்று நம் ஆய்வாளர்கள் அங்கு சென்று ஆய்வு செய்யும்போது அவர்கள் ஆய்வாளர்களிடம் சரியான ஒத்துழைப்பு தருவதில்லை. எங்களுக்குக் குறைவான சம்பளம் என்று அவர்கள் ஆய்வாளர்களிடம் சொன்னால் நன்றாக இருக்கும். ஆனால் அவர்கள் அதைச் சொல்வதற்குத் தயங்குகிறார்கள். ஏனென்றால் மறுநாள் வேலை போய் விடும் என்று இருக்கின்றார்கள். அந்த அளவிலே அப்படியும் ஆய்வு செய்யப்பட்டு 1988 ஆம் ஆண்டிலே மொத்தம் 212 வழக்குகள் போடப்பட்டு அதில் 202 வழக்குகளிலே தண்டனை பெற்றுத்தந்திருக்கிறார்கள். ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப் பெற்று இனி அத்தனை பேர்களுக்கும் நியாயமான அளவிலே கூலி கிடைக்கக்கூடிய அளவிலே செயல்படுத்தப்படும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிருந்து சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள் வதற்கு ஆலை அரசர்கள் ஒப்பந்தக்கூலித் தொழிலாளர்களாக அவர்களை நடத்தி வருகின்றார்கள் என்பது அறிய வருகிறது என்று சொன்னால், தமிழக அரசு இந்த ஒப்பந்தக் கூலி தொழி லாளர்களின் நடைமுறைகளை மாற்றி சட்டச் சலுகைகளும் நிர்ணயக்கூலியும் கிடைக்கச் செய்வதற்கு புதிய சட்டம் ஏதும் கொண்டுவரும் உத்தேசம் உண்டா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலோசித்து புதிதாக சட்டம் கொண்டு வரப்படும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பீடி மற்றும் சுருட்டு தொழி லாளர்கள் சட்டத்தின் கீழ் வீட்டிலிருந்து பீடி சுற்றும் பெண் களுக்கு இலையை வாங்கிச் சென்று வீட்டில் சுற்றும் பெண் களுக்கு பாஸ் புத்தகம் போட வேண்டும் என்று விதி இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் 6 லட்சம் பெண்கள் இந்த தொழிலிலே ஈடுபட்டிருந்தாலும் 2 லட்சம் பேர்களுக்கு மட்டும் தான் பாஸ் புத்தகம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்ட அதிகாரி களுக்கு பாஸ் புத்தகம் வழங்கப்படாத அந்த பெண்களுக்கு பாஸ் புத்தகங்களை வழங்குவதற்கு உத்தரவு இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டு பாஸ் புத்தகங்களை வழங்க ஆவன செய்யப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு இந்த பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டத்தை முழுமையாக அமலுக்குக் கொண்டு வரக் கோரி கடந்த ஜூலை மாதத்திலே வேலை நிறுத்தம் செய்திருக்கின்றார்கள். தமிழகத்திலே லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து அன்றைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டுப் பேசுவதாக அறிவித்து 3 முறை பேச்சு வார்த்தை நடத்தி பிறகு ஏதோ காரணத்தினால் பேச்சு வார்த்தை நடத்த முடியாமல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட சென்னையில் உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கோட்டை நோக்கி ஊர்வலமாக வந்து இந்தச் சட்டத்தை அமலாக்க வேண்டும்என்று கோரியிருக்கிறார்களே. அதிலே இலை பற்றாக்குறை ஏற்பட்டு பல மாதங்களாக வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே குடியாத்தத்திலே கூட 7ஆம் நெம்பர் பீடி இலை பல மாதங்களாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரச்சினைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றதா? அதைத் தீர்ப்பதற்கு அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பீடி சுற்றுகின்ற இலையைப் பொறுத்த மட்டில் மத்திய அரசிடம் மற்றும் ஆந்திர பிரதேச அரசிடம் பேசி உரிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ஏற்கனவே. ஆனால் அவைகள் முறையாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவா என்பது நம்முடைய உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே மீண்டும் பரிசீலிக்கப்படும். அதோடு பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களுடைய நிலை பற்றித் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போதும் புதிதாகப் பொறுப்பு ஏற்றிருக்கும் அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த பேச்சுவார்த்தைகளை நடத்தி நல்ல ஒரு சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

10–20 மணி

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்களுக்காக சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்னால், இன்றைக்கு முதல்வராக பொறுப்பேற்றிருக்கின்ற நம்முடைய தலைவர் அவர்கள் ஏற்கனவே பீடித் தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, திருச்சியில் அவரே நேரடியாகப் போராட்டத்தில் இறங்கி, அவர்களைக் காப்பாற்றுவதற்காக அன்றைக்குப் போராட்டத்தில் கலந்து கொண்ட நம்முடைய தலைவர் அவர்களே இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் இந்த பீடி தொழி

1990 சனவரி 20]

லாளர்களுடைய, சுருட்டுத் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற அளவில், 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அந்த சட்டத்தில் இருக்கின்ற ஓட்டை உடைசல்களை நீக்கி இந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 1148, 1743, 5046, 5369 மற்றும் 5648 ஒரே பொருள் தொடர்புடையவைகயாக இருப்பதால் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கால்நடை மருத்துவக் கல்லூரிகள்.

*1148. திரு. ஜி. ஜி. குருமூர்த்தி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பெரியார் மாவட்டத்தில், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

*1743. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்,

பேராசிரியர் க. பொன்னுசாமி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?